I am very glad that they have also been provided some employment opportunities and given some training in gainful employment.

Because of non-availability of jobs, some ladies take to prostitution. If you want to check up prostitution, I must say that more employment opportunities must be given to such ladies because they are very poor and there is no option for them except to take to prostitution. Day-to-day we are seeing it. So, if we want to minimise prostitution, the Government must see that more employment opportunities are given to such ladies, especially to those who are in need of jobs. Otherwise, poverty among such ladies indirectly encourages prostitution, as has been mentioned in a report in the Illustrated Weekly of India. So, I request the Hon. Minister to consider this matter seriously and see that something is done for such ladies who are entangled in this racket.

Finally I want to stress one matter. A large number of beggars are found in the streets only because of their poverty. There is no use of simply taking them to Beggar Homes and keeping them there. We must provide them with opportunities of some employment. Or, they must be given a piece of land. Because there is no employment or any piece of land for them, they are begging. It is the duty of the Government to see that they are given opportunities for gainful employment. Those who are not having any land or any house must be given land, or co-operative farm should be formed for their benefit. They must be given first priority in the matter of providing employment in the Employment Exchanges, so that we can solve this beggar problem also. Thank you, Sir

5. அறிவிப்பு.

பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று (9–4–1975) கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவின்படி பேரவையின் நிகழ்ச்சிகள் கீழ்க்கண்டபடி நடைபெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

12–4–1975 (சனிக்கிழமை) ..	தெலுங்கு வருடப் பிறப்பு—விடுமுறை.
13–4–1975 (ஞாயிற்றுக்கிழமை)	விடுமுறை.
14–4–1975 (திங்கட்கிழமை)	தமிழ் வருடப் பிறப்பு—விடுமுறை.
15–4–1975 (செவ்வாய்க்கிழமை)	அரசினர் சட்ட முன்வடிவுகளும் தீர்மானங்களும்.
16–4–1975 (புதன்கிழமை)	

1975 ஏப்ரல் 9] [பேரவைத் தலைவர்]

17–4–1975 (வியாழக்கிழமை) .. தனியார் அலுவல்கள்.

18–4–1975 (வெள்ளிக்கிழமை) } அரசினர் சட்ட முன்வடிவுகளும்
19–4–1975 (சனிக்கிழமை) } தீர்மானங்களும்.

4. 1975–76–ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. சி.வி.எம். அண்ணாமலை : பேரவைத் தலைவர் அவர்களே, மீனளத்துறை மானியம் பற்றியும், சமூக நலத்துறை மானியம் பற்றியும் இந்த இரண்டு கோரிக்கைகள் மீதும் மன்ற உறுப்பினர்கள் புதுமையான கருத்தினை மிக நன்றியுணர்வோடு எங்களுக்கு அளிப்பார்கள் என்று நான் எதிர்பார்த்தேன்.

உண்மையாகவே அரசு எந்தெந்த துறைகளில் விரிவான திட்டத்தை மேற்கொண்டு திட்டமிட்டுச் செயல்படுகிறதோ அதையே இவர்கள் இல்லாதது போன்ற தோற்றுவாயில் அவர்கள் பேச்சின் மூலம் கேட்டிருக்கிறார்கள் என்றாலும் அவர்களுக்கு இதில் இருக்கின்ற ஊக்கத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அந்த வகையிலே, மீன் வளம் ஏழைப் பாட்டாளி மக்களுக்குச் சத்துணவாக, ஊட்டம் நிறைந்த சிறந்த உணவாகக் கருதப்படுகிறது, பாலில் கிடைக்காத பெரும் சத்தை, பழரசத்தில் கிடைக்காத சத்தை, பருப்பு வகைகளில், நெய்யில் கிடைக்காத சத்தை, இப்படிப்பட்ட பொருள்களை உயர்ந்த விலை கொடுத்து வாங்கி உணவு அருந்த முடியாத ஏழை மக்களுக்கு மலிவான விலையிலே நல்ல புரதச் சத்து தரும் ஊட்டச் சத்தாக அமைந்திருப்பது, ஏழை நடுத்தர மக்களுக்கு அமைந்திருப்பது இந்த மீன் என்பது உடல்கூறு வல்லுநர்கள் அனைவரும் ஒருமுகமாகக் கூறும் பேருண்மையாகும்.

அந்தக் கருத்தில் விசைப் படகுகளின் மூலம் வளத்தைப் பெருக்க வேண்டுமென்று ஏறத்தாழ 61 ஆண்டுகளுக்கு முன்பு தோற்று விக்கப்பட்ட இந்தத் துறை—இன்றையதினம் நடை போட்டுக்கொண்டிருக் கிறது. இந்த 1967–ஆம் ஆண்டு வரையிலும் ஏறத்தாழ எத்தனை விசைப்படகுகள் வழங்கியிருக்கிறது என்றால் 599 படகுகள்தான் மீனளத் துறையிலே இதற்கு முன் இருந்த அரசில் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை இங்கு கூறிய உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். காரணம், கழக அரசு பொறுப்பிலே வந்த பிறகு ஏதோ கவனக் குறைவாக நடப்பதைப்போல கருத்து தெரிவித்ததால் இதைக் கூறுகிறேன். விசைப் படகுகள் வழங்குவதன் மூலமும், மற்றும் கட்டுமரங்கள், கலன்கள், படகுகள் போன்றவற்றிற்கும் சாதாரண 5 குதிரை ஓட்டமுள்ள இயந்திரங்கள் பொருத்தப்பட்டு, அவர்களுக்கு மலிவான வகையில் நல்ல சத்துணவைக் கொண்டு வரவும், அதே நேரத்தில் அவர்களுக்குத் தொழில் வாய்ப்பை ஏற்படுத்தி அவர்களுக்கிடையே வேலை வாய்ப்பைப் பெருக்கவும் வழிவகை செய்ய வேண்டுமென்ற யோசனையைக் கூறி யிருக்கிறீர்கள் என்றாலும் இதற்கு முன் இருந்த அரசு, 61ம் ஆண்டுக் காலத் திற்கு முன் தீட்டப்பட்ட திட்டத்தில், அதில் காட்டியிருக்கிற ஆர்வத் தைப் பார்க்கும் பொழுது 599 விசைப்படகுகள் கொடுக்க முடிந்திருக்கிறது.